டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 144 | 18.11.2025 | TUESDAY | KARTHIGAI : 1 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 144 | 18.11.2025 | செவ்வாய்கிழமை | கார்த்திகை : 1 | விலை : ரூ.5/– |

3 நவ.19ல் பிரதமர் மோடி கோவை வருகை : விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

4 வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் இன்று முதல் நவ.23ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு

2 திமுக கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம் : வைகோ திட்டவட்டம்

# பிஹாரில் நவ.20 புதிய அரசு பதவியேற்பு: பிரதமர் மோடி பங்கேற்பு முதல்வர் யார்?

பாட்னா: நவ.18-

பிஹாரில் புதிய அரசு நவம்பர் 20 ஆம் தேதி பாட்னாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க காந்தி மைதானத்தில் பதவியேற்க உள்ளது. இருப்பினும் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் நிதிஷ் குமார் பத்தாவது முறையாக முதல்வராக பதவியேற்பாரா என்பது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு மட்டும் இன்னும் வெளியாகவில்லை.

பிஹாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் புதிய அரசு அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிஹார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் போது உரையாற்றிய பிரதமர் மோடி, "புதிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் பதவியேற்புக்கு மீண்டும் வருவேன்." என்று உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள அமைச்சரவையை கலைப்பதற்காக, நிதிஷ் குமார் இன்று அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துகிறார். அதைத் தொடர்ந்து நிதிஷ்குமார் தனது ராஜினாமாவை ஆளுநர் ஆரிஃப் முகமது கானிடம் சமர்ப்பிப்பார். அதன்பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் இணைந்து அடுத்த முதல்வர் மற்றும் அமைச்சரவை குறித்த முடிவுகளை எடுக்கும். இதனை தொடர்ந்து புதிய அரசு அமைக்க ஆளுநரிடம் உரிமை கோரப்படும்.

243 உறுப்பினர்களைக் கொண்ட



பிஹார் சட்டப்பேரவையில் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களைப் பெற்று, மிகப்பெரிய பெரும்பான்மையைப் பெற்றது. பாஜக அதிகபட்சமாக 89 இடங்களைப் பெற்றது, அதைத் தொடர்ந்து ஜேடியு 85 இடங்களைப் பெற்றது. மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வானின் எல்ஜேபி 19 இடங்களை வென்றது. இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா 5 இடங்களையும் மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 இடங்களையும் வென்றன. ஆர்ஜேடி தலைமையிலான மகா கூட்டணி 35 இடங்களை மட்டுமே வென்றது.

பிஹாரில் ஆட்சி அமைப்பது தொடர்பாக பாஜகவின் உயர்மட்டத் தலைவர்களை சந்திக்க டெல்லியில் இருந்த ஜேடியு செயல் தலைவர் சஞ்சய் குமார் ஜா நேற்று நிதிஷ் குமாரைச் சந்தித்தார். செய்தியாளர்களிடம் அவர், "சில நாட்களில், புதிய அரசாங்கம் அமைக்கப்படும். சரியான நேரத்தில் நீங்கள் விவரங்களை அறிந்து கொள்வீர்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அறிக்கையில் நாங்கள் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம்." என்று கூறினார்.

2020 தேர்தலில் 50க்கும் குறைவான எம்எல்ஏக்கள் மட்டுமே இருந்ததால் குறைவான அமைச்சர்களை பெற்ற ஐக்கிய ஜனதா தளம், இம்முறை அமைச்சரவையில் அதிக இடங்களை கேட்டுள்ளது. இதற்கிடையில், எல்ஜேபி கட்சி புதிய அரசாங்கத்தில் சேர ஆவலுடன் இருப்பதாக சிராக் பாஸ்வான் கூறினார். அதே நேரத்தில் எல்ஜேபி துணை முதல்வர் பதவியை எதிர்பார்ப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேபோல இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா கட்சிகளும் அமைச்சரவையில் இடம் கேட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



■ திருச்சி உறையூர், மெதடிஸ்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில் பங்கேற்று பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேருவழங்கினார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, குறிப்பாக பெண்களின் கல்வி வளர்ச்சிக்குமுக்கியத்துவம்கொடுத்துஎண்ணற்ற திட்டங்களை நம் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது என்றும் கல்வி ஒன்றே நம்மைகாக்கும்பேராயுதம்என்பதை உணர்ந்து ஒவ்வொரு மாணவரும்; ஒவ்வொரு மாணவியும் கல்வியில் மென்மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்று பேசினார். இந்நிகழ்வில்,மாவட்டஆட்சித்தலைவர்வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் , முதன்மைக்கல்வி அலுவலர் கோ.கிருஷ்ணப்பிரியா, மெதடிஸ்ட் பள்ளி தலைமையாசிரியர் த.லதா மேரி ஷெலீன், நகரப்பொறியாளர் சிவபாதம் மற்றும் மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் , மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




03.11.25 தேதியிட்ட நமது சக்கர வியூகம் நாளிதழில், மயிலாடுதுறை அறநிலையத்துறையில் மன்மத ராசா கார்த்திகேயன்... என்ற தலைப்பில், மயிலாடுதுறை மாவட்டம் அனந்தமங்கலம் ராஜகோபால சுவாமி கோவில் செயல் அலுவலர் பற்றி செய்தி வெளியிட்டு இருந்தோம். நமது செய்தியின் எதிரொலியாக செயல் அலுவலர் கார்த்திகேயன் நாகப்பட்டினம் மண்டலத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

- ஆசிரியர்

## அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)

(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

## சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 2ஆயிரம் பள்ளி மாணவ மாணவிகள் பெண்களை போற்றும் வண்ணம் உலக சாதனைக்காக இரத்த துளியில் பெண் இருப்பது போல் நின்று சாதனை

### இன்ஜீனியஸ்ஷாம் நிறுவனம் உலக சாதனைக்கான சான்றிதழை பள்ளி அறங்காவலர் என்.திலகத்திடம் வழங்கினார்

சின்னாளபட்டி, நவ.18-

சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 2ஆயிரம் பள்ளி மாணவ மாணவிகள் பெண்களை போற்றும் வண்ணம் உலக சாதனைக்காக இரத்த துளியில் பெண் இருப்பது போல் நின்று சாதனை படைத்தனர். இன்ஜீனியஸ்ஷாம் நிறுவனம் உலக சாதனைக்கான சான்றிதழை பள்ளி அறங்காவலர் என்.திலகத்திடம் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.





திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கல்வி, விளையாட்டு மற்றும் கலைத்துறையில் சாதனைப்படைத்து வரும் பள்ளியாகும். சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் அக்னி சிறகுகள் அமைப்புடன் இணைந்து உலக சாதனைக்காக பள்ளி மைதான வளாகத்தில் மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும் என்பதை வழியுறுத்தியும், பெண்களை போற்ற வேண்டுமென்ற நல்நோக்குடன் உலக சாதனையை நிகழ்த்தியது. காலை 9.30 மணியளவில் பள்ளி மைதான வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பள்ளி முதல்வரும் அறங்காவலுருமான என்.திலகம் தலைமை தாங்கினார். அக்னி சிறகுகள் நிறவனர் பிரபு முன்னிலை வகித்தார். திண்டுக்கல் அக்னி சிறகுகள் அமைப்பின் தலைவி பிரியங்கா வரவேற்றார். பார்வையாளராக இன்ஜீனியஸ்ஷாம் நிறுவனத்தை சேர்ந்த ஏஞ்சலின் கலந்துகொண்டார். 1 முதல் 12ம் வகுப்பு பள்ளி மாணவ மாணவியர்கள் 2ஆயிரம் பேர் பள்ளி மைதானத்தில் இரத்த துளியில் பெண் இருப்பது போல் உருவ அமைப்பில் நின்று உலக சாதனை படைத்தனர். இன்ஜீனியஸ்ஷாம் நிறுவனத்தை சேர்ந்த ஏஞ்சலின் உலக சாதனைக்கான சான்றிதழை பள்ளி முதல்வர் என்.திலகத்திடம் வழங்கிய போது பள்ளி மாணவர்கள் மகிழச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். உலக சாதனை குறித்து பள்ளி அறங்காவலர் என்.திலகம் கூறுகையில் எங்கள் பள்ளி பல்வேறு துறைகளில் சாதனை படைத்தாலும் உலக சாதனை பட்டியலில் முதன்முதலில் இடம் பிடிக்கிறது. குறிப்பாக மாணவியர்களுக்கு பாதுகாப்பான பள்ளி என பெருமை பெற்ற எங்கள் பள்ளியில் இந்த சாதனை நடைபெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழக அரசு மகப்பேறு காலங்களில் மட்டும் ஊதியத்துடன் விடுமுறை அளிப்பது போல் மாதவிடாய் காலங்களிலும் பெண்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு அளிக்க வேண்டும் என்பதை வழியுறுத்திதான் இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளோம் இதற்கு ஒத்துழைப்பு அளித்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில ஹேண்ட்பால் கழக செயலாளரும், பள்ளி தாளாளரும் நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார் பள்ளி மேலாளரும் அறங்காவலருமான ஓ.பி.பாரதிராஜா, அறங்காவலர்கள் ஜெ.ஆல்பிரட்எங், அபிஷேக், தலைமையிலான பள்ளி நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியில் தன்னம்பிக்கை பேச்சாளர் சிங்கதேவன், சமூக ஆர்வளர் பிரசாந்த், பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் என்.அசோக்குமார், செந்தில்குமார், ஆரோக்கிய ரஞ்சனி மற்றும் பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு உலக சாதனையை படைத்தனர்.

## தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்க மாநில தலைவர் பி.ஜி.ரவிக்குமார் தேர்வு

திருச்சி. நவ.18

திருச்சியில் மாநில மத்திய செயற்குழு கூட்டம் தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சு பணி அலுவலர் சங்கம் சார்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்க மாநில தலைவராக பி.ஜி .ரவிக்குமார், ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் பின்பு மாநில பொறுப்புத் தலைவர் செந்தில்வேல், அரசு அலுவலக ஒன்றியத்தின் மாநில தலைவர் மகேந்திரகுமார், சால்வை அணிவித்து கௌரவப்படுத்திய போது அருகில் நிர்வாகிகள்... தேர்தல் அலுவலராக சூரிய



நாராயணன்,ரமேஷ் கண்ணா மற்றும் கவிதா ஆகியோர்கள் மேலும் ஒன்றியத்தின் மாநில பொருளாளர் திலகர்,மேனாள் மாநில தலைவர் தண்டபாணி, மேனாள் மாநில தலைவர் தேசிங்குராஜா, மேனாள் மாநிலத் துணைத் தலைவர் சந்திரசேகர், மாநில பொருளாளர் பார்த்தசாரதி, அமைப்புச் செயலாளர் பாலமுருகன், ஒன்றிய மதுரை மாவட்ட தலைவர் அ. இளங்கோ, மருத்துவத்துறை மதுரை மாவட்ட தலைவர் பாலமுருகன், சென்னை ஏ.வி.ஜி. சேகர்,திருவள்ளூர் கமலக்கண்ணன், திருச்சி சதீஷ் பாபு, ஆரோக்கியராஜ், ஆனந்த், ஜான் வில்லியம்,கவிதா, லட்சுமி, திண்டுக்கல் சரண்ராஜ் ,சுரேஷ் கோவை வீராசாமி, தஞ்சை நந்தகோபால்' தேனி ஜான்சிராணி ஆகியோர் உடன் உள்ளனர்.

# “வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!” : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, நவ.18-
சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற முற்போக்குப் புத்தகக்காட்சியின் நிறைவு நாளில் (நவ.16) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை புரிந்து சுமார் 2 மணிநேரம் செலவிட்டு, பல புத்தகங்களை வாங்கி சென்றார்.



திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து அறிவுச்செயல்பாடுகளை முன்னெடுக்கும் இயக்கம் என்பது அனைவராலும் அறியப்பட்டதே.

அந்த வகையில், தி.மு.கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75-ஆண்டு நிறைவை முன்னிட்டு, கழக இளைஞர் அணி ‘தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ என்னும் மாபெரும் நிகழ்ச்சியை நடத்தியுள்ளது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தி.மு.க இளைஞர் அணி முன்னெடுத்த ‘தி.மு.க 75 - அறிவுத்திருவிழா’ என்னும் மகத்தான நிகழ்ச்சியை நவ.08 அன்று கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் தொடக்க நாளில் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல் வெளியிடப்பட்டு, ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ தலைப்பிலான கருத்தரங்கங்கள் நடைபெற்றன. மேலும் ஒருவார காலம் நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நவ.08 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், புத்தகக்காட்சியின் நிறைவு நாளான (நவ.16) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை புரிந்து சுமார் 2 மணிநேரம் செலவிட்டு, பல புத்தகங்களை வாங்கி சென்றார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தது பின்வருமாறு,

வள்ளுவர் கோட்டத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்து திராவிடம், அம்பேத்கரியம், கம்யூனிசம், பெண்ணியம் என அணிவரிசையில் அமைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வந்திருந்த வாசகர்கள், ஆர்வலர்கள், பதிப்பகத்தாருடன் உரையாடியது மனநிறைவளிக்கும் அனுபவமாக அமைந்தது.

குறிப்பாக, 'Carry on, but remember' எனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பைக் கண்டதும் நம் அண்ணன் அன்று விடுத்த எச்சரிக்கை இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதே என வியந்தேன். என் பங்கிற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிவிட்டேன்.

வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக்கூடாத நிகழ்வாக இதனை நடத்திக் காட்டியுள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது இளைஞரணி தம்பிமார்களுக்கு மீண்டுமொருமுறை எனது பாராட்டுகள்! வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!”



# பாமக யாருடன் கூட்டணி? விரைவில் அறிவிப்பதாக ராமதாஸ் தகவல்

சென்னை, நவ.18-
சட்டப்பேரவை தேர்தலுக்கு யாருடன் கூட்டணி அமைக்கப்படும் என்று விரைவில் அறிவிப்பதாக பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை பாமக கிழக்கு மாவட்டம் சார்பில் நெமிலியில் நேற்று பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது: மதுப் பழக்கத்தை ஒழித்தால்தான் சமுதாயமும், நாடும் முன்னேறும். விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும். ஏழைக்கு ஒரு கல்வி, நடுத்தர மக்களுக்கு ஒரு கல்வி, பணக்காரர்களுக்கு ஒரு கல்வி என்பதுபோல கல்வியின் நிலைமை உள்ளது. வன்னியர்களுக்கு மட்டுமின்றி மாநிலத்தில் உள்ள அனைத்து சாதிகளுக்காகவும் போராடி வருகிறது பாமக.

வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும், இதற்காக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற 2 கோரிக்கைகளை வலியுறுத்தி டிசம்பர் 12ம் தேதி மிகப்பெரிய போராட்டம் நடத்தப்பட உள்ளது. சட்டப்பேரவை தேர்தலுக்காக யாருடன் கூட்டணி என விரைவில் முடிவெடுக்கப்படும். அந்த கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும். தேர்தலுக்காக பெண்கள் 500, 1000 ரூபாய் வாங்குவதை தவிர்க்க வேண்டும். வாக்குக்கு பணம் வாங்க மாட்டோம் என உறுதியாக இருக்க வேண்டும். பெண்கள் உறுதியாக இருந்தால் நல்லாட்சி அமையும். இவ்வாறு அவர் பேசினார்.

# திருப்பூரில் கே.எம்.சி சட்டக் கல்லூரி அரசியலமைப்பு தின விழா மற்றும் மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி

திருப்பூர், நவ.18-
76 வது அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு திருப்பூரில் கே.எம்.சி சட்டக் கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி 76வது இந்திய அரசியலமைப்பு தினத்தை கொண்டாடும் வகையில், திருப்பூரில் உள்ள கே.எம்.சி சட்டக் கல்லூரியில் அரசியலமைப்பு தின விழா மற்றும் விழிப்புணர்வு மாணவ பேரணியை நடத்தியது.

வரலாற்று சிறப்புமிக்க தியாகி திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் தொடங்கிய விழிப்புணர்வு பேரணியை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி N.சதீஷ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற பேரணியில் 300 க்கும் மேற்பட்ட சட்டக் கல்லூரி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் முக்கிய சாலைகளின் வழியாக சென்று திருப்பூர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் வரை ஊர்வலமாக சென்றனர்.

பேரணி சீரான முறையில் அமைதியாக நடந்து முடிந்தது.




KMC சட்டக் கல்லூரியின் தாளாளர் மற்றும் தனியார் சட்டக் கல்லூரி கூட்டமைப்பின் துணை தலைவருமான அருணா ஸ்ரீதேவி, கே.எம்.சி வள்ளியம்மை கல்வி அறக்கட்டளையின் தலைவி திருமதி லோகநாயகி, KMC சட்டக் கல்லூரியின் முதல்வர் எம்.எஸ். சௌந்தரபாண்டியன், செயலாளர் ஞான வர்ஷினி, செயல் அலுவலர் சசிகாந்த் பங்கேற்றனர்.

பேரணியின் தொடர்ச்சியாக, கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் எம்.எஸ். சௌந்தரபாண்டியன் வரவேற்புரையாற்றி அனைவரையும் வரவேற்றார்.

அரசியலமைப்பு தின உரையில், உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு. திரு. ழி. சதீஷ்குமார், நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய அரசியலமைப்பை எடுத்துரைத்து, உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு இடையிலான சமநிலையை வலியுறுத்தினார். சரத்து 32 ஐ அரசியலமைப்பின் "இதயம் மற்றும் ஆன்மா" என்று அழைத்தார். சேகூர் யானை வழித்தட தீர்ப்பை மேற்கோள் காட்டி, அரசியலமைப்பு சரத்து 51கி(ரீ) இன் கீழ் நீதிமன்றம் தன் அணுகுமுறையை சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கி செல்வதை கோடிட்டுக் காட்டினார்.

அரசியலமைப்பை ஒரு உயிருள்ள ஆவணமாகக் கருதி சட்ட மாணவர்கள் தங்கள் வாழ்வில் அரசியலமைப்பு மதிப்பீடுகளை பின்பற்றுமாறு வலியுறுத்தினார். அரசியலமைப்பு தின விழா போட்டிகளாக வினாடி வினா மற்றும் விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே விழா நிறைவடைந்தது.




■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் குழந்தைகள் நலம் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் சார்பில், குழந்தைகள் தின விழிப்புணர்வு வார நிகழ்ச்சியை முன்னிட்டு வெளிப்புற விழிப்புணர்வு பேரணி குடியை சேர்த்து தொடங்கி வைத்தார்கள் உடன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரியாஸ் அகமது பாஷா.

# திமுக கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம் : வைகோ திட்டவட்டம்

சென்னை, நவ.18-
மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, திருச்சியில் இருந்து மதுரைக்கு (ஜன.2 முதல் 12 வரை) ‘சமத்துவ நடைபயணம்’ மேற்கொள்ள இருக்கிறார். இந்த பயணத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைக்க உள்ளார்.



இந்த நிலையில், திருநெல்வேலி மண்டலத்துக்கு உட்பட்ட மாவட்டங்களில் இருந்து இந்த பயணத்தில் பங்கேற்க உள்ள தொண்டர்களிடம் வைகோ நேர்காணல் நடத்தினார். தென்காசி மாவட்டம் கலிங்கப்பட்டியில் இந்த நேர்காணல் நடைபெற்றது. ‘‘உங்களுக்கு புகை பிடித்தல், மது அருந்துதல், போதை பொருட்கள் பழக்கம் உள்ளதா? 10 நாட்கள் தொடர்ந்து நடப்பீர்களா? காலில் கொப்புளம் வந்தால் தாங்கிக் கொள்வீர்களா? நீங்கள் நடைபயணம் மேற்கொள்ள அப்பா அம்மா ஒப்புதல் தருவார்களா?’’ என பல கேள்விகளைக் கேட்டு, தொண்டர்களை வைகோ தேர்வு செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திராவிட இயக்கத்தை அழித்துவிடலாம் என சனாதன சக்திகளும், ஆர்எஸ்எஸ், இந்துத்வாவும் முயற்சி செய்கின்றன. திராவிட இயக்கத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கடமை என் கண் முன்னால் நிற்பதாலும், 61 ஆண்டுகள் திராவிட இயக்கத்தில் பாடுபட்டிருப்பதாலும், திராவிட இயக்கத்தை பாதுகாப்பது ஒன்றுதான் வாழ்நாள் கடமை என 9 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு எடுத்து திமுகவுடன் கூட்டணி அமைத்தோம். அதில் உறுதியாக இருக்கிறோம்.


தமிழக அரசியலில் புதிது புதிதாக சலசலப்புகள் ஏற்படுகின்றன. புதிதாக ஒருவர் வந்துள்ளார். கூட்டத்தை கூட்டி, 41 பேர் மடிந்த பிறகு கொஞ்சமும் பொறுப்பு, குற்ற உணர்வின்றி சென்னைக்கு ஓடிவிட்டார். பாதிக்கப்பட்டவர்களை தனது இருப்பிடத்துக்கு அழைத்து அனுதாபம் தெரிவித்த சம்பவம் தமிழக வரலாற்றிலேயே இல்லாதது. ஊருக்குள் ஒரு கி.மீ. தூரம் நடந்துவிட்டு, அடுத்த ஊருக்கு காரில் சென்று நடைபயணம் மேற்கொள்ளும் பித்தலாட்ட நடைபயணத்தை நாங்கள் மேற்கொள்ளவில்லை. முழுமையாக நடைபயணம் மேற்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி பேச்சா? : இல்லவே இல்லை என்கிறார் செல்வப்பெருந்தகை

தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல் வெளியான நிலையில், அதை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பிஹார் தேர்தல் வெற்றியால் பாஜக மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறது. தமிழகம், புதுச்சேரி, கேரளா மாநில தொண்டர்களுக்கு இந்த வெற்றியால் புது சக்தி கிடைத்திருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் பார்வை அடுத்ததாக தமிழகம் நோக்கி திரும்பியுள்ளது.

இதற்கிடையே, 2026 சட்டப்பேரவை தேர்தலில் கூடுதல் இடங்கள், வெற்றி பெற்றால் ஆட்சியில் பங்கு இந்த இரண்டும் காங்கிரஸ் கட்சியினரின் பிரதான வலியுறுத்தலாக இருந்தது.. பிஹார் தேர்தல் முடிவுக்கு முன்பு வரை. இப்போது கேட்கும் நிலையிலும் இல்லை. அது கிடைக்கும் நிலையிலும் இல்லை என்ற சூழல் உருவாகியுள்ளது. இதற்கிடையே, மேற்கண்ட இரண்டையும் தருவதற்கு தயாராக உள்ள தவெகவுடன் கூட்டணி வைக்கலாமா என காங்கிரஸ் தலைமை ஆலோசித்து வருவதாகவும், இதுகுறித்து தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் மற்றும் ராகுல் காந்திக்கு நெருக்கமான பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் விஜய்யுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ‘தமிழகத்தில் காங்கிரஸுக்கு 70 இடங்கள், விஜய்க்கு ஆட்சிப் பொறுப்பு.



புதுச்சேரி, கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி’ என்று பேசி முடிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆனால், இந்த தகவல்களை திட்டவட்டமாக மறுத்துள்ளார் மாநில காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை. ‘‘தவெக தலைவர்களுடன் காங்கிரஸ் கட்சியில் இருந்து யாரும் பேசவில்லை. அப்படி பேச வேண்டும் என்றால் கிரிஷ் சோடங்கர்தான் பேச வேண்டும். அதுபோல தவெகவுடன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று அவரும் உறுதிபட தெரிவித்துள்ளார். எனவே, அது வதந்தி’’ என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே, சிவகங்கையில் நடைபெற்ற தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் பயிற்சி முகாமில் பங்கேற்ற செல்வப்பெருந்தகை, செய்தியாளர்களிடம் பேசியபோது, ‘‘தமிழகத்தில் காங்கிரஸ் வலிமையாக உள்ளது. எஸ்ஐஆருக்கு எதிராக விஜய் கட்சி போராடியதை வரவேற்கிறோம். பிஹார் தேர்தலில் தோற்றது காங்கிரஸ் அல்ல; ஜனநாயகம்தான் தோற்றது. தமிழகத்தில் ஜனநாயகம் தோற்க வாய்ப்பில்லை. அதற்கு காவலாக ஸ்டாலினும், கூட்டணி கட்சிகளும் உள்ளன.

ராகுல் வந்த பிறகு காங்கிரஸ் தொடர் தோல்வி அடைந்து வருவதாக பாஜக கூறுகிறது. ஆனால், கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் பாஜகவும், அதன் கூட்டணி கட்சிகளும் தோல்வி அடைந்தன. கர்நாடகா, தெலங்கானா, ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களிலும் பாஜக தோற்றுள்ளது. வெற்றி தோல்வி இரண்டையும் சமநிலையுடன் தான் காங்கிரஸ் பார்க்கும். தமிழகத்தில் ஆட்சியில் பங்கு வேண்டும் என்று நான் ஒருபோதும் கேட்டதில்லை. எந்த இடத்திலும் நான் கேட்கவும் மாட்டேன். சிலர் தங்களது விருப்பத்தை கூறினர். அதைத்தான் வெளிப்படுத்தினேன்’’ என்றார்.

# நவ.22ல் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம்

சென்னை: நவ.18-
நவ.22 ஆம் தேதி வங்கக் கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



தென் இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது மேற்குவடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து செல்லும் என சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும் உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் நவம்பர் 21, 22 ஆம் தேதிகளில் கன மழை முதல் மிக கனமழை பெய்யும். நவ.22 ஆம் தேதி வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது மேற்குவடகிழக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# நவ.19ல் பிரதமர் மோடி கோவை வருகை : விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு



கோவை: நவ.18-

பிரதமர் நரேந்திர மோடி கோவை வருகையை முன்னிட்டு கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோவையில் இயற்கை வேளாண் மாநாடு நவம்பர் 19,20 ம் தேதிகளில் நடக்கிறது. நவம்பர் 19ம் தேதி நடைபெறும் நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். இதையொட்டி விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோவை விமான நிலைய நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாதுகாப்பு காரணங்களுக்காக பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கோவை விமான நிலையத்தில் தற்காலிகமாக சில கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி விமான நிலைய வளாக நுழைவாயில் முன் நவம்பர் 18ம் தேதி காலை 6 மணி முதல் நவம்பர் 19ம் தேதி மாலை 6 மணி வரை வாகனங்களை நிறுத்த முற்றிலும் தடை விதிக்கப்படுகிறது.

நுழைவாயில் பகுதியில் பயணிகளை இறக்கி விடவும், ஏற்றிச் செல்லவும் மூன்று நிமிடங்கள் வழங்கப்படும் கால அவகாசம் வழக்கம் போல் நடைமுறையில் இருக்கும். பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும், நவம்பர் 18, 19ம் தேதிகளில் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பயணிகள் மேற்குறிப்பிட்ட புதிய கட்டுப்பாடுகளை பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை விமான நிலைய இயக்குநர்(பொறுப்பு) சம்பத் குமார் கூறும் போது, பிரதமர் வருகை மற்றும் உளவுத்துறை அறிவுறுத்தலின் பேரில் கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்கு வழக்கமாக மேற்கொள்ளப்படும் சோதனை தவிர அனைவரும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு ஒரு சிலருக்கு இரண்டு அல்லது மூன்று முறை சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பயணிகள் மட்டுமின்றி விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், விமான நிறுவனத்தினர் உள்ளிட்ட அனைத்து துறையினரும் விமான நிலையத்திற்குள் மட்டுமின்றி வெளியே அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய தொழிற்பாதுகாப்பு படையினர் அதிதீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.என்றார்.

# 2026 சட்டமன்ற தேர்தலுக்கான சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை ஆத்தூர் ஒன்றியம் முழுவதும் இருசக்கர வாகனத்தில் தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி தலைமையில் திமுக நிர்வாகிகள் ஆய்வு

## ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகள், 3 பேரூராட்சிகள் உட்பட 166 வாக்குச்சாவடி மையங்களை திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஆகியோர் 166 மையங்களில் ஆய்வு



சின்னாளபட்டி, நவ.18

2026 சட்டமன்ற தேர்தலுக்கான சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை ஆத்தூர் ஒன்றியம் முழுவதும் இருசக்கர வாகனத்தில் தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி தலைமையில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி ஆகியோர் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகள், 3பேரூராட்சிகள் உட்பட 166 மையங்களை ஆய்வு செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்றுவரை ஒரே தொகுதியில் போட்டியிட்டு மாபெரும் வெற்றிபெற்று வரும் தொகுதியாகும். தொகுதியின் முடிசூடா மன்னராக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உள்ளார். கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் கூட அசைக்க முடியாத சக்தியாக இருந்து வரும் அவர் கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஆத்தூர் தொகுதியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் இலக்க செய்து தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே இதுவரை யாரும் பெறாத வாக்கு எண்ணிக்கையை பெற்று 1லட்சத்து 35ஆயிரத்தி 571 வாக்குகள் பெற்று சரித்திரம் படைத்துள்ளார். வரும் 2026ம் சட்டமன்ற தேர்தலுக்காக மத்திய அரசு சிறப்பு வாக்காளர் திருத்த பட்டியலை கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதற்குகு தமிழகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி வரும் நிலையில் வாக்காளர் சேர்க்கை பணி நடைபெற்று வருகிறது. ஆத்தூர் தொகுதியின் திமுக தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளராக இருக்கும் கள்ளிப்பட்டிமணி தலைமையில் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ஆத்தூர் ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையாலீர்நத்தம் முருகேசன், சீவல்சரகு ராஜேந்திரன், ஆகியோர் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 166 வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்ற வாக்காளர் சேர்க்கை குறித்து கேட்டறிந்ததோடு முறையாக அதிகாரிகள் வீடு தவறாமல் விண்ணப்பம் கொடுத்து வருகின்றனரா என்பதை ஆய்வு செய்தனர். ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உத்தரவுபடி இருசக்கர வாகனங்களில் கட்சியின் மூத்த நிர்வாகிகள் அனைத்து வாக்குச்சாவடிக்கும் சென்று ஆய்வு செய்திருப்பது திமுகவினர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தாங்கள் கழகப்பணி ஆற்றுகிறோம் என்பதை தென்பாண்டி சிங்கம் ஐ.பெரியசாமி அவர்களுக்கு தெரியும்வண்ணம் தலைமை கட்சி நிர்வாகிகள் தங்கள் பகுதிக்கு வந்து ஆய்வு செய்தது மகிழ்ச்சி அளிப்பதாக திமுக நிர்வாகிகள் தெரிவித்தனர். திமுகவினர் பம்பரம் போல் சுழன்று ஆத்தூர் தொகுதி முழுவதும் வாக்காளரை சேர்த்து வரும் நிலையில் எதிர்கட்சிகளான தே.மு.தி.க, அதிமுக, நாம்தமிழர், த.வெ.க, பா.ம.க, அமமுக, நிர்வாகிகள் வாக்காளர்களை சேர்க்காமல் ஏனோதானோ என்று இருப்பது வாக்காளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# பிரசாந்த் கிஷோரிடம் இருந்து பாடம் கற்பாரா விஜய்?



குஜராத், நவ.18-


குஜராத் முதல்வராக இருந்த மோடியை நாட்டின் பிரதமராக உயர்த்த வியூகம் வகுத்தவர், பிஹாரில் நிதிஷ்குமார், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி, ஆந்திராவில் ஜெகன்மோகன் ரெட்டி, தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரின் வெற்றிக்கு வியூகம் வகுத்தவர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் பிரபல தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர்.

அவருக்கு பேரதிர்ச்சி கொடுத்திருக்கிறது பிஹார் தேர்தல் முடிவு. சொந்த மாநிலமான பிஹாரில் மிகுந்த நம்பிக்கையுடன் தனது ஜன் சுராஜ் கட்சி சார்பில் 238 தொகுதிகளில் வேட்பாளர்களை இறக்கினார். 150 இடங்களில் வெற்றி நிச்சயம் என்றார். ஆனால், போட்டியிட்ட அனைத்திலும் தோல்வி. டெபாசிட்கூட 2 தொகுதிகளில் மட்டும்தான் கிடைத்தது.

ஊருக்கெல்லாம் ஆலோசனை சொன்னவர் சறுக்கியது ஏன்? பிரசாந்த் கிஷோர் ஏற்கெனவே வேலை செய்த அத்தனை தலைவர்களுக்கும் அவர்களது கட்சி என்கிற கட்டமைப்பு மிக வலுவாக இருந்தது. அந்த வலுவான கட்டமைப்பில் சில உத்திகளை புகுத்தி, பல வியூகங்களை வகுத்து அதை மக்கள் மத்தியில் எடுபடச் செய்து அதன்மூலம் அரசியலில் ஜொலிக்கச் செய்ய அவரால் முடிந்தது. எனவே, வியூகம் வகுப்பதைவிட கட்சி கட்டமைப்புதான் முக்கியம் என்பதை தெளிவாக உணர்த்தியிருக்கிறது இந்த தேர்தல். தமிழகத்தில் இது தவெகவுக்கான செய்தி.

கட்சித் தலைவர் விஜய், பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் என்ற இருவரை மையப்படுத்தியே செயல்பட்டு வரும் தவெகவுக்கு அடிப்படை கட்டமைப்பு மற்ற பிரதான கட்சிகள் அளவுக்கு இல்லை என்ற விமர்சனம் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. அதனால், கட்சியின் அடிப்படை கட்டமைப்பை வலுப்படுத்தாமல் வெறும் வியூகத்தை மட்டுமே நம்பி களமிறங்குவது வெற்றியை தேடித் தராது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

ரசிகர்களுக்கான தலைவர் என்பதைக் கடந்து, பனையூரைவிட்டு வெளியே வந்து முழுநேர அரசியல்வாதியாக விஜய் மாறினால் மட்டுமே பிஹாரில் பிரசாந்த் கிஷோருக்கு ஏற்பட்டதுபோன்ற நிலைமையை தவிர்க்கலாம் என்பதும் அவர்களது கருத்தாக உள்ளது.



# குண்டும் குழியுமான சாலை; சிக்னலும் இல்லை போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கும் மண்ணூர்பேட்டை

சென்னை: நவ.18-

தொழிற்பேட்டை பகுதியான மண்ணூர் பேட்டை சாலை குண்டும் குழியுமாகவும், சிக்னல் இல்லாததாலும் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவித்து வருகின்றனர். சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை (எம்டிஹெச்.சாலை) மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு செல்லும் இணைப்புச் சாலைகள் இணையும் பகுதியில் மண்ணூர்பேட்டை சந்திப்பு அமைந்துள்ளது.

அம்பத்தூர் தொழிற்பேட்டை, முகப்பேர் போன்ற பகுதிகளுக்கு செல்லும் வாகனங்கள் மண்ணூர்பேட்டை வழியாகத் தான் தினந்தோறும் சென்று வருகின்றன. இந்நிலையில் சமீப காலமாக மண்ணூர் பேட்டை சாலை குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது.

சாலையின் பெரும்பாலான பகுதிகள் பெயர்ந்து, பள்ளங்கள் நிறைந்திருக்கின்றன. ஜல்லி கற்கள் சாலையெங்கும் சிதறி கிடக்கின்றன. அதேபோல் முறையான சிக்னல் மற்றும் யூடர்ன் வசதி இல்லாததால் அருகே உள்ள பகுதிகளுக்கு செல்லும் வாகனங்கள் எம்டிஹெச் சாலையில் அங்குமிங்குமாக குறுக்கே புகுந்து சென்று வருகின்றன. இதன் விளைவாக தினசரி போக்குவரத்து நெரிசல் என்பது சகஜமாகி, மக்கள் அலைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதுதொடர்பாக அம்பத்தூர் பகுதியை சேர்ந்த வாகன ஓட்டி மணிகண்டன் என்பவர் கூறுகையில், தினமும் அலுவலக நேரங்களில் மண்ணூர்பேட்டையை கடந்து செல்ல 30 நிமிடங்களாகிறது. மழை நேரத்தில் மழைநீர் தேங்குவதால் பள்ளங்கள் தெரியாமல் குழிகளில் வாகனங்களை இயக்குவதால் சேதமடைகின்றன.

முகப்பேர், கோல்டன் காலனி, சத்யா நகர் செல்வதற்காக வரும் வாகனங்கள் முறையான சிக்னல் இல்லாததால், அவர்கள் விருப்பத்துக்கு செல்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகரிக்கிறது. எனவே மண்ணூர் பேட்டையில் சாலைகளை பழுது பார்க்க தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். போக்குவரத்து நெரிசலை குறைக்க முறையான சிக்னல் வசதி அல்லது யூடர்ன் வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கிறது.



# சென்னை மின்சார ரயில் முதல் வகுப்பு பெட்டிகளில் மகளிர் இருக்கைகள் ஆக்கிரமிப்பு:

## நடவடிக்கை எடுக்க பயணிகள் கோரிக்கை

சென்னை: நவ.18-

சென்னை மற்றும் புறநகர் மக்களின் பொது போக்குவரத்தில் மின்சார ரயில் சேவை முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த மின்சார ரயில் சேவையை பொருத்த வரை, சென்னை கடற்கரை தாம்பரம், செங்கல்பட்டு, சென்னை கடற்கரை வேளச்சேரி உட்பட பல வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், பெண்களின் இருக்கைகளை ஆண்களும், முதல் வகுப்பு டிக்கெட் எடுக்காதவர்களும் ஆக்கிரமித்து வருவதால், பெண் பயணிகள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். இது குறித்து, திருநின்றவூர் பயணிகள் பொதுநலச் சங்க தலைவர் முருகையன் கூறியதாவது: மின்சார ரயில்களில் முதல் வகுப்பு பெட்டிகளில் பெண்களுக்கென தனி பகுதி உள்ளது.

காலை, மாலை, நெரிசல் மிகுந்த நேரங்களில் இந்த முதல் வகுப்பு பெட்டிகளில் பெண்கள் பகுதிகளில் உள்ள இருக்கைகளை ஆண்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். குறிப்பாக இந்த இருக்கைகளை ஆண் பயணிகள், இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுத்து முதல் வகுப்பில் பயணிப்பவர்கள் ஆக்கிரமித்து கொள்கின்றனர்.

இதனால், பெண் பயணிகள் கூட்ட நெரிசலில் நின்றபடி பயணிக்கும் அவலநிலை உள்ளது. இது குறித்து, ரயில்வே நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், ஓரிரு நாட்கள் மட்டும் டிக்கெட் பரிசோதகர்கள் கண்துடைப்பாக ஆய்வுசெய்து சென்று விடுகின்றனர்.

இப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண வேண்டும். முதல்வகுப்பு பெட்டிகளில் பெண்கள் பகுதிகளில் ஆண்கள் பயணிக்கக் கூடாது. முதல்வகுப்பு பெட்டிகளில் இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுத்தவர்கள், வியாபாரிகள் பயணிப்பதை தடுக்க வேண்டும். முதல்வகுப்பு பெட்டிகளில் அதற்குரிய டிக்கெட் எடுத்தவர்கள் தான் பயணிக்கிறார்கள் என்பதை பரிசோதனை மூலமாக உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.




■ மதுரை தமுக்கம் மைதானத்தில் அகில இந்திய அளவிலான சரஸ் மேளா நடைபெறவுள்ளதை முன்னிட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., கொடியசைத்து துவக்கி வைத்தார்.



■ மதுரை மாவட்டம், 189 – 193மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்பாலை எம்.எம்.நகரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர முறைத் திருத்தம் 2026 தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., ஆய்வு செய்து பார்வையிட்டார்.



# பொது கழிப்பிட பிரச்சனை திருச்சி சூப்பர் பஜார் வியாபாரிகள் கடைகளை அடைத்து போராட்டம்

திருச்சி, நவ.18-

திருச்சி சூப்பர் பஜாரில் உள்ள கழிவறைகளை பூட்டியதை உடனடியாக திறக்க வேண்டும் என வலியுறுத்தி சூப்பர் பஜார் கடைகளின் வியாபாரிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கடைகளை அடைத்து விட்டு, இன்று திரண்டு வந்து மாநகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.பின்னர் அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மாநகராட்சி அலுவலகத்தில் மேயர், கமிஷனர் ஆகியோரை சந்தித்து மனு அளித்தனர். திருச்சி சூப்பர் பஜார் கடை உரிமையாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகளின் திடீர் போராட்டத்தால் மாநகராட்சி அலுவலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



# S.I.R. படிவத்தை நிராகித்த போடிநாயக்கனூர் குறவர் காலனி சமுதாய மக்கள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

தேனி, நவ.18-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் குறவர் காலனி பகுதியில் குடியிருந்து வரும், சுமார் 2000 மக்கள் தங்களுக்கு அடிப்படை வசதிகளான சாக்கடை வசதிகள், குடிநீர் வசதிகள், மின் வசதிகள், சாலை வசதிகள் இல்லாமல் மிகவும் தவித்து வருவதாகவும், துப்புரவு பணியாளர்களாக இருக்கும் தாங்கள் நகர்ப்பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்ளவும், குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து வரும் தங்கள் பகுதி மக்கள் கடந்த 50 ஆண்டு காலமாக அடிப்படை வசதிகளை கோரி போராட்டம் நடத்தி வருவதாகவும், காமராஜர், கலைஞர், எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் தங்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்ட நிலையில், தற்போது வரை ஆளும் அரசு தங்களை கைவிட்டு விட்டதாகவும், வேதனை தெரிவித்த அப்பகுதி மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களாக இருப்பதால், தங்களைப் புறக்கணிப்பதாகவும், இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்க இருப்பதாகவும், மாவட்ட ஆட்சியர் தங்கள் பகுதியை ஆய்வு செய்ய வர வேண்டும் என்றும், அவ்வாறு வராத பட்சத்தில் எஸ் ஐ ஆர் படிவங்களை பூர்த்தி பூர்த்தி செய்து தர போவதில்லை என்றும், குறவர் சமுதாய மக்கள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மற்றும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்க போவதாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களான அருந்ததியர் மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.




■ சிவசேனா கட்சி யு பி டி சார்பில் மாநிலத் தலைவர் ரவிச்சந்திரன். மாநில பொதுச்செயலாளர் சுந்தர வடிவேலன் ஆகியோரின் ஆலோசனைப்படி சிவசேனா கட்சி நிறுவனத் தலைவர் ஸ்ரீ பாலா சாகிப் தாக்கரே ஜி அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு திருப்பூர் யூனியன் மில் ரோட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வு மாவட்டத் தலைவர் கே ஜி சக்திவேலன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொதுச்செயலாளர் வினோத் குமார், தெற்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார்,வடக்கு மாவட்ட செயலாளர் ஜெயக்குமார், வடக்கு மாநகர செயலாளர் பாரதிராஜா,தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் பரமசிவம்,தெற்கு மாநகரச் செயலாளர் அருண்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் இன்று முதல் நவ.23ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ.18-

வங்கக் கடலில் நவ.22 ம் தேதி வாக்கில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் நிலையில், தமிழகத்தில் நாளை முதல் நவ.23ம் தேதி வரை கனமழை நீடிக்க வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: 'தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோர பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது நாளை (நவ.18) மேற்கு அல்லது வடமேற்கு திசையில் மெதுவாக நகரக்கூடும். மேலும் நவ.22ம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது, அடுத்த 48 மணி நேரத்தில்



மேற்கு அல்லது வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை பெரும்பாலான இடங்களிலும், நவ.19 முதல் 23ம் தேதி வரை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தென்காசி மற்றும் தேனி மாவட்டங்களிலும் 19, 20 தேதிகளில் மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களிலும், 21ம் தேதி மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டங்க ளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும், 22ம் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 23ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் சிவகங்கை, அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும் இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரையில் 12 செமீ, மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் 9 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் 8 செமீ, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம், தலைஞாயிறு, மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம், சீர்காழியில் தலா 7 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், புதுச்சேரி, மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி, மயிலாடுதுறை ஆகிய இடங்களில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது' இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு



தேனி, நவ.18-

தேனி மாவட்டத்தில் பயிரிடப்படும் பழப்பயிர்களில் மாபயிரானது மிக அதிகப்படியாகவும் அனைத்தும் மற்றும் பெரும்பாலும் நீலம், பங்கனப்பள்ளி, பெங்களூரா, செந்தூரா ஆகிய இரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

தேனி மாவட்டம் பயிரிடப்படும் பழப்பயிர்களில் பொதுவாக, மா மரங்களில் அறுவடை முடிவுற்றவுடன் மரத்தின் வளர்ச்சிக்காவும் மா மரங்களில் காய் பிடிப்பதற்காகவும், பூக்கும் தன்மையை மேம்படுத்துவதற்காகவும் விவசாயிகளால் கல்தார் (Paclo butrazol) என்ற வளர்ச்சி ஊக்கி மருந்து உபயோகிக்கப்பட்டு வருகிறது. கல்தார் மருந்தினை தொடர்ந்து உபயோகிப்பதனால் மா மரத்தின் இயற்கையான வளர்ச்சியும், ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. கல்தார் ஒரு இரசாயன மருந்து என்பதால் அது மண்ணில் உள்ள நன்மை செய்யும் நுண்ணுயிரிகளை பாதித்து வளமான மண்ணை மலட்டுத்தன்மை உடைய மண்ணாக மாற்றி, சாகுபடிக்கு உபயோகமில்லாததாக மாற்றக்கூடும். இம்மருந்தை தொடர்ந்து பயன்படுத்துவதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகரிப்பதோடு பூச்சிதாக்குதலுக்கான காரணிகள் பல மடங்கு பெருகி மகசூல் பாதிக்க வழிவகை செய்யும். மேலும், இம்மருந்தின் பயன்பாட்டினால் மாம்பழங்களின் தரம் குறைந்து, பழத்தின் சதைப்பகுதி உண்பதற்கு உகந்ததல்லாததாக மாறக்கூடும் மற்றும் இம்மருந்தின் தொடர்ச்சியான பயன்பாட்டினால் மா மரத்தின் வளர்ச்சி சீரற்று தோற்றத்திலும் மாறுபாடு அடையக்கூடும். எனவே, விவசாயிகள் இத்தகைய கல்தார் மருந்தினை மா மரங்களுக்கு உபயோகிப்பதனை முற்றிலும் தவிர்த்து, இயற்கையாக மா பயிரில் நல்ல மகசூல் பெற்று, பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.



# சேலம், ஈரோடு, போத்தனூர் வழியாக விசாகப்பட்டணம் கொல்லம் இடையே சபரிமலை சிறப்பு ரயில் இயக்கம்

சேலம், நவ.18-

விசாகப்பட்டணம்கொல்லம் இடையே சேலம், ஈரோடு, போத்தனூர் வழியே சபரிமலை சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. கேரளா மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை விழா தொடங்கியநிலையில், நாடு முழுவதும் இருந்து ஐயப்ப பக்தர்கள், யாத்திரை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் செல்ல வசதியாக ரயில்வே நிர்வாகம் முக்கிய நகரங்களில் இருந்து சிறப்பு ரயில்களை இயக்குகிறது. இதன்படி, ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டணத்தில் இருந்து கொல்லத்திற்கு சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் போத்தனூர் வழியாக 3 மாத காலத்திற்கு சபரிமலை சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

இதன்படி, விசாகப்பட்டணம்கொல்லம் சிறப்பு ரயில் (08539) நாளை முதல் ஜனவரி 20ம் தேதி வரை செவ்வாய்க்கிழமை தோறும் (10 சேவை) இயக்கப்படுகிறது. விசாகப்பட்டணத்தில் காலை 8.20 மணிக்கு புறப்பட்டு சாமல்கோர்ட், ராஜமுந்திரி, விஜயவாடா, நெல்லூர், ரேணிகுண்டா, காட்பாடி, ஜோலார்பேட்டை வழியே சேலத்திற்கு அடுத்தநாள் அதிகாலை 2 மணிக்கு வந்து, ஈரோடு, திருப்பூர், போத்தனூர், பாலக்காடு, திருச்சூர், ஆலுவா, எர்ணாகுளம் டவுன், கோட்டயம், திருவல்லா, செங்கானூர், காயங்குளம் வழியாக கொல்லத்திற்கு மதியம் 1.45 மணிக்கு சென்றடைகிறது.

இதையடுத்து மறுமார்க்கத்தில், கொல்லம் விசாகப்பட்டணம் சிறப்பு ரயில் (08540) நாளை மறுநாள் (19ம் தேதி) முதல் ஜனவரி 21ம் தேதி வரை புதன்கிழமை தோறும் (10 சேவை) இயக்கப்படுகிறது. கொல்லத்தில் மாலை 5 மணிக்கு புறப்பட்டு, எர்ணாகுளம் டவுன், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு வழியே சேலத்திற்கு அடுத்தநாள் அதிகாலை 4.05 மணிக்கு வந்து, காட்பாடி, ரேணிகுண்டா, விஜயவாடா வழியாக விசாகப்பட்டணத்திற்கு இரவு 11 மணிக்கு சென்றடைகிறது. இந்த சிறப்பு ரயிலுக்கான டிக்கெட் முன்பதிவு நடந்து வருகிறது. இதனை பயணிகள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று தெற்கு ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.



■ பாரதி ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் மாவட்ட தலைவர் K.C.M.B சீனிவாசன் அவருடைய வாழ்த்துக்களுடன் பீகார் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வென்று வெற்றி வாகை சூடியுள்ளது. இதனை கொண்டாடும் விதமாக நெருப்பெரிச்சல் மண்டல் சார்பாக, மண்டல தலைவர் S. உதயகுமார் BE தலைமையில் பொதுச்செயலாளர் கார்த்திகேயன், பொதுச் செயலாளர் தினேஷ் குமார் பொருளாளர் சரவணன் பிரகாஷ் ஒ பி சி மாவட்ட துணை தலைவர், ராஜா மாவட்ட செயலாளர் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு ,ரத்தினசாமி மாவட்ட செயலாளர் விவசாய அணி, பாலசுப்பிரமணியம் மாவட்ட செயலாளர் , பாண்டியன் மாவட்ட செயலாளர் ஆன்மீகம் மற்றும் கோவில் மேம்பாட்டு பிரிவு, தனசேகர் மாவட்ட செயலாளர் ஊடகப்பிரிவு, சிறுபான்மையணி மாவட்ட பொதுச்செயலாளர் சபி, மண்டல துணைத்தலைவர் மீனாட்சி காளிமுத்து கிருஷ்ணமூர்த்தி மண்டல் செயலாளர் சிவா சிவகுமார் சதீஷ், மண்டல் நிர்வாகிகள் ஆம்புலன்ஸ் பாலு, வடிவேல், கன்னிகா ஆனந்தன், ராஜா பாண்டியன் நகர், சேகர் பாண்டியன் நகர்,திருப்பதி, பிரகாஷ் முருகன் சர்வீஸ் சென்டர்,சேகரன், குணசேகரன் காமாட்சி சுந்தரம், ஐயப்பன் சத்தியமூர்த்தி, சரவணன், பொன்னியின் செல்வன், அபிஷேக் சரவணராஜ், பழனிச்சாமி, மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பூண்டி ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றம் விநாடிக்கு 3000 கன அடியாக அதிகரிப்பு

திருவள்ளூர்: நவ.18-

கனமழை எச்சரிக்கையால் பூண்டி ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றம் விநாடிக்கு 3 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது; புழல் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றம் விநாடிக்கு 1,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் ஏரிகளில் முக்கிய ஏரியான பூண்டி ஏரியிலிருந்தும் வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த மாதம் 15ம் தேதி மதியம் முதல் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் விநாடிக்கு 700 கன அடி என, வெளியேற்றப்பட்டு வந்த உபரி நீரின் அளவு, நீர் வரத்தை பொறுத்து அதிகரிக்கப்பட்டும், குறைக்கப்பட்டும் வந்தது. இந்நிலையில், கடந்த மாதம் 24ம் தேதி மாலை விநாடிக்கு 10,250 கன அடி என, பூண்டி ஏரிக்கு நீர் வரத்து இருந்ததால், அன்று மாலை 6 மணியளவில், பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு விநாடிக்கு 9,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

அதன் பிறகு, நீர் வரத்தை பொறுத்து, பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டும், அதிகரிக்கப்பட்டும் வந்தது. இந்நிலையில், இன்று காலை 6 மணியளவில் பூண்டி ஏரிக்கு, நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து விநாடிக்கு 790 கன அடியாகவும், ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு விநாடிக்கு 2,500 கன அடியாகவும் இருந்தது.

இதனால், 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் 35 உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர் இருப்பு, 2,398 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்ட உயரம், 32.57 அடியாகவும் இருந்தது. இச்சூழலில், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கன மழை எச்சரிக்கை காரணமாக இன்று காலை 8 மணியளவில், பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவை விநாடிக்கு 3 ஆயிரம் கன அடியாக அதிகரித்தனர் நீர் வள ஆதாரத் துறை அதிகாரிகள்.

புழல் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றம் விநாடிக்கு1, 500 கன அடியாக அதிகரிப்பு: சென்னை குடிநீர் ஏரிகளில் ஒன்றான புழல் ஏரிக்கு, வடகிழக்கு பருவமழையால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து உள்ளது. ஆகவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த மாதம் 15ம் தேதி முதல் புழல் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வந்தது. தொடக்கத்தில் விநாடிக்கு 200 கன அடி வெளியேற்றப்பட்டு வந்த உபரி நீரின் அளவு, படிப்படியாக அதிகரிக்கப்பட்டும், குறைக்கப்பட்டும் வந்தது.

அதுமட்டுமல்லாமல், நீர் வரத்தை பொறுத்து, அவ்வப்போது உபரி நீர் வெளியேற்றம் நிறுத்தப்படுவதும், பிறகு தொடர்வதுமாக இருந்து வந்தது.இந்நிலையில் இன்று காலை 6 மணி நிலவரப்படி, 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியின் நீர் இருப்பு 2,803 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்ட உயரம் 18.95 அடியாகவும், நீர் வரத்து விநாடிக்கு 285 கன அடியாகவும்,உபரி நீர் வெளியேற்றம் விநாடிக்கு 600 கன அடியாகவும் இருந்தது.

இச்சூழலில் கன மழை எச்சரிக்கை காரணமாக இன்று காலை 8 மணியளவில் புழல் ஏரியிலிருந்து வெளியேற்றப்பட்டு வந்த உபரின் அளவை விநாடிக்கு 1, 200 கன அடியாக அதிகரித்தனர் நீர் வள ஆதாரத் துறையினர். பிறகு அந்தளவு, மதியம் 2 மணியளவில் விநாடிக்கு 1,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

ஆகவே, பூண்டி மற்றும் புழல் ஏரிகளின் உபரி நீர் செல்லும் கொசஸ்தலை ஆறு, புழல் ஏரி உபரி நீர் கால்வாய் ஆகியவற்றின் கரையோரங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்து வருகிறது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000